பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

30 10 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கு தேவையான ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயல்படும் யூ-டியூப் அலைவரிசைகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.
4. தமிழகத்தில் பொதுமக்கள் பசுமை பட்டாசுகளை வெடித்து பாதுகாப்பான தீபாவளியை கொண்டாடுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Anjali Kumari, Chanchal Choudhary, Krisha Verma** மற்றும் வினி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கு தேவையான ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாதுகாப்பு துறை வளர்ச்சி தொடர்பாக, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவும், இளையோரின் திறன் காரணமாகவும், பாதுகாப்பு தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நிதியாண்டில் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாயையும், ஏற்றுமதி 21 ஆயிரம் கோடி ரூபாயையும் எட்டியுள்ளதையும் திரு நரேந்திர மோடி அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாடு அனைத்துத்துறைகளிலும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு தற்போது வெகுவாக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளை இதற்கு காரணம் என்று அவர் கூறினார்.

தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் இந்நன்நாளில் உறுதியேற்போம் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயல்படும் யூ-டியூப் அலைவரிசைகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜையையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 25 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக அடுத்த மாதம் 20-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 38 தொகுதிகளில் வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

முதல்கட்டமாக அடுத்த மாதம் 13-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 43 தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்வதற்கான காலஅவகாசம் இன்று நிறைவடைந்தது.

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 20-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனையும் இன்று நடைபெற்றது.

மனுக்களை விலக்கிக்கொள்ள அடுத்த மாதம் 4-ஆம் தேதி கடைசிநாளாகும்.

இந்த இரண்டு மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>>

வெங்காயம் விலை கட்டுக்குள் இருப்பதை உறுதி செய்வதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

840 மெட்ரிக் டன் வெங்காயம் ரயில் மூலம் தில்லிக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்களின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த வெங்காயம் தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மத்திய அரசு நிர்ணயித்த மலிவு விலையில் விற்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெங்காயம் 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்.

இதேபோல், 840 மெட்ரிக் டன் வெங்காயம் ரயில் மூலம் நாசிக்கிலிருந்து, குவஹாத்திக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

லடாக்கையொட்டிய எல்லைப்பகுதியில் இந்தியா —சீனா படைகளை விலக்கிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

**Depsang** மற்றும் **Demchok** பகுதிகளில் இருநாடுகளும் பரஸ்பரம் படைகளை விலக்கிக்கொண்டுள்ளதாக ராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பகுதிகளில் ஒருங்கிணைந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் விரைவில் தொடங்கும் என்றும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

<<<<<<>>>>>>

சவுதி அரேபியாவின் ரியாத்தில் உள்ள வணிக வளாகத்தில் தீபாவளி கொண்டாட்டங்களையும், சிறப்பு விற்பனை அரங்கினையும் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று தொடங்கிவைத்தார்.

லடாக்கின் ஆப்பிள் இந்த அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா — சவுதி அரேபியா இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக இந்த வணிக வளாகத்தில் தீபாவளி கொண்டாட்டங்கள் நடைபெறுவதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பண்டிகை காலங்களில் இயக்கப்படும் சிறப்பு ரயில்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தீபாவளி பண்டிகையையொட்டி, பயணிகளின் கூட்டநெரிசலை தவிர்ப்பதற்காக 7 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக அவர் அண்மையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2 ஆயிரத்து 500 அதிகமாகும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், பண்டிகை காலங்களில் தினசரி 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் சிரமமமின்றி ரயில் பயணங்களை மேற்கொள்ள இயலும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பொதுமக்கள் பாதுகாப்பான தீபாவளியை கொண்டாடுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், காலை 6 மணிமுதல் 7 மணிவரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணிவரை மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும் என்றும், திறந்தவெளியில் ஒன்றுக்கூடி பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் முயற்சிக்க வேண்டும் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்கக்கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்,

மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள், வழிபாட்டு தலங்கள் போன்ற அமைதிகாக்கப்படும் இடங்களிலும், குடிசைப்பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய இடங்களிலும் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, தீபாவளி பண்டிகையையொட்டி, சேலம் சிறைக்கைதிகள் தயாரித்த இனிப்பு பொருட்களின் விற்பனை பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 46 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Anjali Kumari, Chanchal Choudhary, Krisha Verma** மற்றும் வினி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் **Colorado** –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் அவர்கள் வெற்றிபெற்றனர்.

---------------

**Hylo** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டடத்தில் அவர், 20-22, 24-22, 21-17 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Chiraj Sen** –ஐ வென்றார்.

------------------

சியோல் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - **Niki Kaliyanda Poonacha** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 7-5 என்ற செட் கணக்கில், பிரான்சின் **Benoit Paira – Antoine Escoffier** இணையை வென்றது.

மற்றொரு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், ராம்குமார் ராமநாதன் - **Saketh Myneni** இணை 7-4, 7-6 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Matthew Christopher Romios - **கொலம்பியாவின் **Cristian Rodriguez** இணையை வென்றது.

---------

மஸ்கட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah – Chitale** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, கொரியாவின் **Park – Yoon** இணையை வென்றது

----------------

அல்பேனியாவில் நடைபெற்றுவரும் உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Mansi Ahlawat** வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.

---------------------

**<<<<<<>END>>>>>**